DEPOSITION OF WITNESSES

(Chapter XXII Code of Criminal Procedure)

IN THE COURT OF JUDICIAL MAGISTRATE COURT, No.2 SRIVAIKUNDAM

| | |
|---|---|
| Case No | CC.419/ 2013 |
| Depostition of witness for | Prosecution wit. PW. 7 |
| Name | திரு. பைரன் |
| Father Name | செல்வராஜ் |
| Village | மாஞ்சாகோணம், திற்பரப்பு, கன்னியாகுமரி மாவட்டம். |
| Taluk | |
| caste | |
| calling | வெல்டிங்வேலை |
| Religion | |
| Age | 38 |

**(1,2 எதிரிகள் ஆஜரில்லை: 1,2 எதிரிகள் தரப்பில் கு.வி.மு.ச பிரிவு 317(2)ன் கீழ் மனுதாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது. எதிரி தரப்பில் வழக்கறிஞர்கள் ஆஜர்) )**

**Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 the 04-07-2026.(நேரம்: 12.25PM )**

**(சாட்சி காணொலி காட்சி மூலம் விசாரிக்கப்படுகிறார்)**

**முதல்விசாரணை**

1. நான் தற்போது ஐரோப்பாவில் உள்ள துருக்கியில் வெல்டராக பணிபுரிந்து வருகிறேன்.

2. இன்று ஆஜரில் இல்லாத 1ஆம் எதிரி விஜயகோபால் மற்றும் 2 ஆம் எதிரி ஜெயபிரகாஷ் ஆகியோர்களை எனக்கு தெரியும்.

3. 1,2, 4 , 5 வரையிலான அரசு தரப்பு சாட்சிகளை தெரியும்.அவர்கள் என்னுடன் பாய்லரில் வேலை பார்த்தவர்கள்.

4.சம்பவம் நடக்கும்போது நான் சம்பவ இடத்தில் இல்லை.

5. சம்பவம் நடந்து ஜீவா மற்றும் முருகேசன் ஆகியோர் பாய்லரில் உட்புறம் உள்ள ஸ்டிக்கில் சிக்கிக்கொண்டிருந்தார்கள். என்னையும்,

மாரிசிவாவையும் பாய்லருக்குள் இறங்கி அவர்களை அப்புற படுத்தும்படி கூறினார்கள்.

6. அதன்படி நானும், மாரிசிவாவும் பாய்லருக்குள் இறங்கி ஜீவாவையும், முருகேசனையும் பாய்லரில் உள்ள ஸ்டிக்கில் இருந்து அப்புறப்படுத்தினோம்.

7. அவர்களில் முருகேசன் ஆத்தூரில் உள்ள சங்கர் மருத்துவமனைக்கு சிகிச்சைக்காக சேர்த்தபிறகு இறந்துவிட்டார்.

8.இந்த விபத்திற்கு யார் காரணம் என்று எனக்கு தெரியாது.

9.என்னிடம் காண்பிக்கப்படும் புகார் வாக்குமூலத்தில் உள்ள இரண்டாவதாக உள்ள அறிவேன் சாட்சி கையெழுத்து என்னுடைய கையொப்பம் தான். **அது அசாஆ ஆக குறியீடுசெய்யப்படுகிறது.**

10.போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**2 ஆம் எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை (நேரம் 12.13PM)**

1. என்னையும், மாரிசிவாவையும் பாய்லருக்குள் இறங்கி ஜீவாவையும், முருகேசனையும் பாய்லரில் இருந்து அப்புறப்படுத்த சொல்லி உத்தரவு போட்டது யார் என்று கேட்டால் 13 வருடம் ஆகிவிட்டது யார் என்று ஞாபகம் இல்லை. ஆனால் வேறு ஒரு இடத்தில் ஓய்வு எடுத்துக்கொண்டிருந்தபோது விபத்து தொடர்பாக எனக்கு போன் செய்து அழைத்தன் பேரில் நான் அங்கு சென்றேன்.

**2 ஆம் எதிரியின் குறுக்கு விசாரணையை 1 ஆம் எதிரி தரப்பில் ஏற்றுக்கொள்ளப்படுகிறது.**

சாட்சியின் வாக்குமூலம் காணொலி காட்சி மூலம் திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்ல, சொல்ல என்னால் தட்டச்சருக்குசொல்லப்பட்டு, அவரால் கனிணியில் பதிவு செய்யப்பட்டு, சாட்சியிடம் படித்து காண்பிக்கப்பட்டு ஒப்புக்கொண்டு கையெழுத்து பெறப்பட்டது.

நீதித்துறை நடுவர் எண். 2
ஸ்ரீவைகுண்டம்.